# ஏந்துவேன் ... சுமப்பேன்

**தாயின் வயிற்றில் தோன்றினது முதல், உங்களை ஏந்தி,**
**தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன்.**
**உங்கள் முதிர்வயது வரைக்கும் நான் அப்படிச் செய்வேன்.**
**நரை வயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன். நான் அப்படிச் செய்து வந்தேன்.**
**இனிமேலும் நான் ஏந்துவேன். நான் சுமப்பேன். தப்புவிப்பேன். ஏசா 46 : 3,4**

நம்முடைய ஆண்டவர் நாம் நமது தாயின் வயிற்றில் தோன்றினது முதல், கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல், நம்மை ஏந்தினார். நம்மைத் தாங்கினார். அல்லேலூயா. அந்த தேவன் இன்று நம்மைப் பார்த்துச் சொல்லுகிறார்.

உங்கள் முதிர் வயது வரைக்கும் நான் அப்படிச் செய்வேன். நரை வயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன் – என்பதாக. முதியோரைப் பார்த்து, “ **அப்படி நான் செய்து வந்தேன்”** என ஆண்டவர் கூறுகிறார். அல்லேலூயா.

**பக்தன் பாடுகிறார்**

இம்மட்டும் கைவிடா தேவன், இனியும் கைவிடமாட்டார்
தாயின் வயிற்றில் தாங்கினார், ஆயுள் முழுதும் தாங்குவார்
தாங்குவார், தப்புவிப்பார், ஏந்துவார் என் தெய்வம்.

வாக்குத்தத்தை ஆவலோடு வாசிக்கிற சகோதரனே, சகோதரியே கர்த்தர் சொல்லுகிறதைக் கவனமாக வாசியுங்கள்.

**இனிமேலும் நான் ஏந்துவேன்**
**நான் சுமப்பேன்,**
**நான் தப்புவிப்பேன்**

– என்கிறார். அல்லேலூயா. இந்த மாதம் முழுவதும் அடிக்கடி இந்த வார்த்தைகளை விசுவாசத்தோடே சொல்லிக் கொண்டேயிருங்கள். கர்த்தர் உங்களை ஏந்திச் செல்வதையும், சுமந்து செல்வதையும், விசேஷமாக உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கொடிய விபத்திலிருந்து தப்புவிப்பதையும் இது முதற்கொண்டு காண்பீர். அல்லேலூயா.